1973 நவம்பர் 20]

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The new district will be constituted with effect from 14th January 1974. A Special Officer has been appointed to work out details and also make preliminary arrangements in connection with the formation of the Pudukottai District.

The proposed Pudukottai District will comprise of the following areas :—

1. Thirumayam;

2. Kulathur;

3. Alangudi;

4. The present Pudukottai sub-taluk will be upgraded into a main taluk and Gandharvakottai and Kallakottai firkas taken away from Orathanadu will be added to the Pudukottai District;

5. Aranthangi taluk;

6. Twenty-one Revenue Villages in Keeramangalam firka of Pattukottai taluk in Thanjavur district will be attached to the Alangudi taluk;

7. Five Revenue Villages taken from Thanjavur taluk will be added to Thirumayam taluk.

Subsequently, the Government consider that the villages covered by the C.M.P. area in Aranthangi taluk should remain in Thanjavur district itself so that the agriculturists will continue to enjoy the benefits and concessions extended by the Government. However, a final decision has not been taken.

வக்பு போர்டால் தொழிற்பயிற்சிப் பள்ளி துவக்கம்

*224 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வக்பு போர்டால் திருச்சியில் ஒரு தொழிற் கல்விக் கூடம் துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : துவக்கப்படயிருக்கிற தொழிற் கல்விக் கூடம் எந்த இடத்தில் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தக் கல்விக் கூடம் அமைப்பதற்கு பத்து ஏக்கர் நிலம் தேவையாக இருக்கிறது. பத்து ஏக்கர் நிலம் இப்போது வாங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஜமால் முகமது கல்லூரியைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் ஐந்து ஏக்கர் நிலத்தை இனமாகவும் ஐந்து ஏக்கர் நிலத்தை குறைந்த விலையில் கொடுப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த நடவடிக்கைகள் முடிந்த பிறகு இடம் தீர்மானிக்கப்படும்.

திரு. கே. ஏ. வகாப் : வக்ப் வாரியம் சார்பில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு யோசனை இருந்ததாக அறியப் படுகிறது. அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றனவா ? அப்படி அமைக்கிற செயற்குறிப்பு வாரியத்தினிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வாரியம் அமைப்பதற்கு முன்னால் கருதப்பட்ட கருத்து. மருத்துவக் கல்லூரி அமைக்க ஏராளமான பணம் தேவையென்ற நிலையில் அத்திட்டத்தை இந்த அரசின் சார்பாக வலியுறுத்தவில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : வக்ப் வாரியத்தால் அமைக்கப்பட இருக்கும் இத்தொழிற் கல்விக் கூடத்தில் ஏழை முஸ்லீம் மாணவர்களுக்கு அதிகம் இடம் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏழை மாணவர்களின் நன்மையைக் கருதித்தான் இதுபோன்ற கல்விக் கூடங்கள் அமைக்கும் முயற்சியினை வக்ப் வாரியம் எடுத்து வருகிறது.

Deaths on account of consuming poisonous toddy at Mathur.

* 225 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether a number of persons had died after drinking toddy at Mathur village near Tranquebar about the 29th April 1973; and

(b) if so, the details thereof?